NATIONS UNIES DROITS DE L'HOMME HAUT-COMMISSARIAT — UNITED NATIONS HUMAN RIGHTS OFFICE OF THE HIGH COMMISSIONER

HAUT-COMMISSARIAT AUX DROITS DE L'HOMME • OFFICE OF THE HIGH COMMISSIONER FOR HUMAN RIGHTS
PALAIS DES NATIONS • 1211 GENEVA 10, SWITZERLAND
www.ohchr.org • TEL: +41 22 917 9000 • FAX: +41 22 917 9008 • E-MAIL: registry@ohchr.org

# இலங்கை தொடர்பாக OHCHR ஆல் நடத்தப்படும் புலனாய்வுகள் மனித உரிமை கவுன்சிலின் A/HRC/25/1 இலக்கம் கொண்ட தீர்மானத்தின் படி வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக

சமர்ப்பணங்களைக் கோருதல்

2014 ஆவணி 1-ம் திகதி

## பின்னணி

ஐக்கிய நாடுகளின் ஒருங்கமைப்பு முறையினுள் இருக்கும் அரசுகளின் உச்ச நிலை அமைப்பு ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கவுன்சில் (HRC ) ஆகும். உலகில் பல்வேறு பகுதிகளில் மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் வலுப்படுத்துவதையும் அதன் பொறுப்பாககொண்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் கால வரையறுக்குள் இலங்கையில் இரு சாராராலும் செய்ய ப்பட்டதாக கூறப்படும் பாரிய மீறல்கள், மனித உரிமைத் துஸ்பிரயோகங்கள் முதலியனவோடு தொடர்புடைய குற்றச்செயல்களை பரிபூரணமாக புலனாய்வு செய்யும் பொறுப்பை ஏற்கும் படி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் 2014ம் ஆண்டில் மார்ச் மாதம் HRC ஏற்றுக் கொண்ட A /HRC /25/1 இலக்கம் கொண்ட தீர்மானத்தினால் வேண்டப்பட்டுள்ளார் . மேலும் நடை பெற்றதாகக் கருதப்படும் மீறல்கள் குற்றவியல் செயற்பாடுகளின் உண்மைகளையும் அவை ஏற்பட்ட சந்தர்ப்பங்களையும் உறுதிப்படுத்தி அவற்றிக்கான பொறுப்புக்கூறலையும் சட்டத்தின் பிடியில் அகப்படாது இருக்கும் நோக்கத்துடன் அவர்கள் செய்ததாகக் கூறப்படும் மீறல்களையும் குற்றவியல் நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்துமாறு வேண்டப்பட்டுள்ளார்.

இலங்கை தொடர்பாக OHCHR ஆல் நடத்தப்படும் புலனாய்வுகளிற்கான அதிகாரப்பத்திரத்தினுள் சர்வதேச மனித

உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் துஸ்பிரயோகங்கள் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் அவற்றோடு தொடர்பான குற்றச் செயல்களும் அடங்குகின்றன .

குறித்த தீர்மானத்திற்கமைய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் **OHCHR** ன் இலங்கைக்கான புலனாய்வு ஒன்றினை நிர்மாணித்துள்ளார் **(OISL)**. OISL க்கு தொடர்ச்சியாக ஆதரவு அளித்து ஆலோசனை வழங்கவென A/HRC/25/1 தீர்மானத்திற்கமைய சுயாதீனமான மேன்மைவாய்ந்த நிபுணர்கள் மூவரை நியமித்துள்ளார். அவர்கள் திரு மார்ட்டி அஹ்டிசாரி , சில்வியா கார்ட்ரைட் அம்மையார் , அஸ்மா ஜகாங்கிர் அம்மையார் ஆவர் .

குறித்த புலனாய்வுகளின் பெறு பேறுகளைக் கொண்ட எழுத்து மூல அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் 2015ம் ஆண்டு மார்ச் மாதம் A /HRC /25/1ம் என்ற இலக்கம் கொண்ட தீர்மானத்திற்கமைய HRC க்கு சமர்ப்பிப்பார்.

**OISL க்கு சமர்ப்பணங்கள்**

இலங்கையில் 2002ம் ஆண்டு பெப்ரவரி 21ம் திகதியில் இருந்து 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி வரையில் ஆயுதம் தாங்கிய இரு சாரார்களாலும் இளைக்கப்பட்டதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள், துஸ்பிரயோகங்கள் பற்றியும் அதனோடு தொடர்பான குற்றச் செயல்கள் பற்றியும் தகவல்களையோ ஆவணமயப்படுத்தப்பட்டவைகளையோ சமர்ப்பிக்குமாறு தனிநபர்கள் , ஸ்தாபனங்கள், அரசாங்கங்கள் முதலியோர் வேண்டப்படுகின்றனர்.

அவை 2014ம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் திகதி ஜெனிவா நேரப்படி நள்ளிரவுக்கு முன் சமர்பிக்கப்படல் வேண்டும். இது புலனாய்வு செய்யும் குழுவினர் சேகரிக்கப்பட்ட தகவல்களை ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்கு போதிய அவகாசம் அளிப்பதற்காகவே ஆகும். மார்ச் மாதம் HRC க்கு அறிக்கையை சமர்ப்பிக்க இரண்டு மாதங்களிற்கு முன்னர்

அறிக்கையின் வரைபிரதி தயாரித்து பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளது .

சமர்ப்பணங்கள் செய்வதற்கான வழிமுறைகள்

சமர்ப்பணங்கள் எழுத்து மூலமாகவும் சமர்பிப்பவர்களின் பெயர் விபரங்களையும், தொடர்பு கொள்ளக்கூடியதாக சேர்த்து அனுப்புதல்
வேண்டும் . அவ்வாறு அனுப்பப்படும் சமர்ப்பணங்களை அனுப்பும் நபரோ ஏனையோரோ அவரின் சமர்ப்பணம் அல்லது அதன் ஒரு பகுதி அந்தரங்கமாக வைக்கப்பட வேண்டும் எனக்கருதின் அது பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் . சமர்ப்பணங்கள் கிடைத்ததும் அவற்றை அனுப்பிய நபர் பற்றிய விபரங்களையும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு நபர்களின் பெயர்களையும் அந்தரங்கமாக வைத்து பாதுகாக்க சகல நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பினை OHCHR ஏற்றுக்கொள்ளும்.

சமர்ப்பணங்கள் ஆங்கிலத்திலோ,சிங்களத்திலோ, தமிழிலோ இருக்கலாம் .அவை 10 பக்கங்களிற்கு மேற்படல் ஆகாது . சமர்பிக்கப்பட்ட தகவல்கள் பற்றிய மேலதிக விபரங்கள் ஏதேனும் OISL க்கு தேவைப்படின் சமர்ப்பணம் செய்தவரை அது தொடர்பு கொள்ளும் .

சமர்ப்பணத்தோடு தொடர்புள்ள வீடியோ, ஓடியோ அல்லது புகைப்படம் போன்றனவற்றை ஈமெயில் மூலம் அனுப்புதல் ஆகாது. அவற்றை அனுப்பவேண்டியிருப்பின் மாற்றுவழியில் அனுப்ப OISL உடன் தொடர்பு கொள்ளவும். சமர்ப்பணங்களை அனுபுவதற்கான ஈமெயில், தபால் விலாசங்கள் பின் வருவனவாகும் .

ஈமெயில் OISL_submissions@ohchr.org
தபால்
OISL
UNOG-OHCHR
8-14 Rue de la Paix
CH-1211 Geneva 10
Switzerland

HRC யின் தீர்மானம் OISL ன் ஆய்வுக்குரிய விதிமுறைகள் மற்றும் OISLபற்றிய ஏதும் விபரங்கள் தேவைப்படின் பின்வரும் வெப்தளத்தைப் பார்க்கவும் .
http://www.onchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx